# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 147 | 4 Pages | 30.12.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 147 | 4 பக்கங்கள் | 30.12.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இறுதி அஞ்சலி செலுத்திய பிறகு விஜயகாந்த் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமான பதிவு



சென்னை, டிச.30

மறைந்த விஜயகாந்தின் உடல் அரசு மரியாதையுடன் தேமுதிக அலுவலகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக, தேமுதிக அலுவலகத்தில் விஜயகாந்தில் உடல் சந்தபேழையில் வைக்கப்பட்ட பிறகு, விஜயகாந்த் உடலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் உள்ளிட்டோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பிறகு, விஜயகாந்த் உடலுக்கு 72 குண்டுகள்முழங்கஅரசுமரியாதை செலுத்தப்பட்டது. 24 போலீசார் 3 முறை வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு மரியாதை செலுத்தினர். பின்னர், 7 மணியளவில் விஜயகாந்தின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

விஜயகாந்துக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், "எங்கள் இதயங்களில்நிரந்தரமாகவாழ்வீர்கள் நண்பரே" என விஜயகாந்த் குறித்து உருக்கமாக தெரிவித்துள்ளார்.

## இந்து என்பது வேறு; இந்துத்துவம் என்பது வேறு: சித்தராமையா பேச்சு



பெங்களூரு: டிச்.30

கர்நாடகாவின் பெங்களூருவில் காங்கிரஸ் கட்சி சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் முதல் மந்திரி சித்தராமையா கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகளை இழக்காமல், இந்துக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு மென்மையான இந்துத்துவம் என்ற அரசியல் தந்திரத்தை கடைப்பிடிக்க வேண்டும் என கூறப்படுகிறது.

மென்மையானஇந்துத்துவம்என்றால்என்ன?கடுமையானஇந்துத்துவம் என்றால் என்ன? என்னைப் பொறுத்தவரை இந்துத்துவம் என்றால் இந்துத்துவம்தான்.

நான் ஒரு இந்து. இந்துத்துவம் என்பது வேறு, இந்து என்பது வேறு. நாம் ராமரை வணங்குவதில்லையா? பா.ஜ.க.வினர் மட்டும்தான் ராமருக்கு கோவில் கட்டுகிறார்களா? நாம் ராமருக்கு கோவில் கட்டவில்லையா? பஜனைப் பாடல்களை நாம் பாடவில்லையா?

டிசம்பர் கடைசி வாரத்தில் மக்கள் பஜனைப் பாடல்கள் பாடுவார்கள். எங்கள் கிராமத்தில் நான் அந்தப் பாரம்பரிய நிகழ்வுகளில் பங்கெடுத்துள்ளேன். மற்றகிராமங்களிலும்இதுநடைமுறையில்உள்ளது. பா.ஜ.க.வினர் மட்டும்தான் இந்துக்களா, நாம் இந்துக்கள் இல்லையா என தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவராக பொறுப்பேற்றார் நிதிஷ் குமார்



புதுடெல்லி: டிச.30

ஐக்கிய ஜனதா தள கட்சியின் செயற்குழு கூட்டம் இன்று தலைநகர் டெல்லியில் நடைபெற்றது. அக்கட்சியின் தலைவராக இருந்த ராஜிவ் ரஞ்சன் சிங் என்ற லாலன் சிங் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இந்நிலையில், பீகார் மாநில முதல் மந்திரியாக இருக்கும் நிதிஷ் குமார், ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவர் பதவியை இன்று ஏற்றுக் கொண்டார்.

சமீபத்தில் நடைபெற்ற இந்தியா கூட்டணியில் ஜனவரி மாதத்திற்குள் பாராளுமன்ற தேர்தலுக்கான தொகுதியை பங்கீட்டை முடிக்க வேண்டும் என நிதிஷ் குமார் வலியுறுத்தியுள்ளார்.

## அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேக விழா 7 நாள் அட்டவணை வெளியீடு



டெல்லி, டிச.30

அயோத்தியில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ராமர் கோயில் கட்டும் பணி முடிவடைந்த நிலையில், நாளை அயோத்தியாவில் வால்மீகி விமான நிலையம் திறக்கப்படுகிறது.

ராமர் கோயிலின் கும்பாபிஷேக விழா வரும் ஜனவரி 22ம் தேதி நடைபெறுகிறது.

இதை முன்னிட்டு, ஜனவரி 16ம் தேதி முதல் நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வுகளின் 7 நாள் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஜனவரி 16 : கோயில் அறக்கட்டளையால் நியமிக்கப்பட்ட புரவலர் மூலம் பரிகாரம், சரயு நதிக்கரையில் தசவித் குளியல், விஷ்ணு வழிபாடு மற்றும் கோடன் நடைபெறுகிறது.

ஜனவரி 17: ராம்லாலா சிலையுடன் அயோத்திக்கு ஊர்வலம் வரும், பக்தர்கள் மங்கள கலசத்தில் சரயு நீரைச் சுமந்து கோவிலை அடைவார்கள்.

ஜனவரி 18: கணேஷ் அம்பிகா பூஜை, வருண பூஜை, மாத்ரிகா பூஜை, பிராமண வரன், வாஸ்து பூஜை போன்றவற்றுடன் முறையான சடங்குகள் தொடங்கும். ஜனவரி 19: அக்னி ஸ்தாபனம், நவக்கிரக ஸ்தாபனம் மற்றும் ஹவன். ஜனவரி 20: கோயிலின் கருவறையை சரயுவின் புனித நீரால் கழுவிய பின், வாஸ்து சாந்தியும், அன்னதானமும் நடைபெறும்.

ஜனவரி 21: 125 கலசங்களுடன் தெய்வீக ஸ்நானம் செய்த பிறகு, ஷயதிவாஸ் செய்யப்படும்.

ஜனவரி 22: காலை வழிபாட்டிற்குப் பிறகு, மதியம் மிருகசிர நட்சத்திரத்தில் ரமலாவின் தெய்வம் பிரதிஷ்டை செய்யப்படும்.

பிரதமர் நரேந்திர மோடி டிசம்பர் 30ம் தேதி உத்தரபிரதேச மாநிலம் அயோத்திக்கு வருகை தர உள்ளதால், அயோத்தி நகரில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அயோத்தி பயணத்தின் போது பிரதமர் மோடி 15,000 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் என்ற புதிய திட்டம்: திருப்பூர் மாவட்ட கலெக்டர் தகவல்

திருப்பூர், டிச.30

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வி, சமூக பொருளாதார மேம்பாட்டில் மிகவும் அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 18.04.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 20232024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்;(தாட்கோ) வழியாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளையோரின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட உதவிடும் பொருட்டு தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தி அமைக்கப்படும்.

இதன் தொடர்பாக தாட்கோ வழியே செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டங்களான பொருளாதார மேம்பாட்டு திட்டம்,இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், இளைஞர்களுக்கானசுயவேலைவாய்ப்புத் திட்டம் (மருத்துவம்), நிலம் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து, 'முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம்" (CMARISE Chief Minister's Adi Dravidar and tRIbal Socio Economic Development Scheme) என்கின்ற பெயரில் ரூ.40.00 கோடி செலவினத்தில் புதிய திட்டமாக செயல்படுத்தப்படும்.

இப்புதிய திட்டத்தின் படி ஆதிதிராவிடர்களுக்கான தனிநபர் திட்டத் தொகையில் முன்விடுப்பு மானியமாக விடுவிக்கப்படும் தொகை 30மூ சதவீதத்திலிருந்து 35மூ சதவீதமாக உயர்த்தவும் அல்லது அதிகபட்சமாக ரூ.3.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அதை கடன் வழங்கும் வங்கிக்கு வழங்கவும் மற்றும் பழங்குடியினருக்கு திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது ரூ.3,75,000ஃ- இவற்றில் எது குறைவானதோ அத்தொகையை மானியமாகவும் 6மூ வட்டி மானியத்தினை அரையாண்டிற்கு ஒருமுறை சம்மந்தப்பட்ட வங்கிகளிடமிருந்து பெற்று, ஒத்திவைப்பு காலம் உட்பட முழுவதுமாக திரும்ப செலுத்தும் காலம் வரை வட்டி மானியம் பெறுவதற்கானதகுதிகளின்அடிப்படையில் வழங்கவும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என் மாவட்ட கலெக்டர்தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளாார்கள்;.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட மேலாளர் அலுவலகம், தாட்கோ, அறை எண்:501 (ம) 503, 5 வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பல்லடம் ரோடு, திருப்பூர்641 604.தொடர்புக்கு: அலைபேசி எண்: 94450 29552, தொலைபேசி எண்: 04212971112.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், காவல்துறை, பொது மக்களுக்கு நன்றி தெரிவித்த பிரேமலதா



சென்னை, டிச.30

தேமுதிக தொண்டர்கள், பொது மக்களுக்கு இருகரம்கூப்பிநன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து அரசியல் கட்சி தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த விஜயகாந்தின் உடல் அரசு மரியாதையுடன் தேமுதிக அலுவலகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது

இதைதொடர்ந்து, பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர் சந்திப்பில் பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

விஜயகாந்தின் உடல் அரசு மரியாதையுடன் சிறந்த முறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

தீவுத்திடலில் இடம் ஒதுக்கீடு கொடுத்து, உதவி செய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்களுக்கு தேமுதிக சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதுகாப்பு வழங்கிய அனைத்து காவல்துறையினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தேமுதிக தொண்டர்கள், பொது மக்களுக்கு இரு கரம் கூப்பி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து அரசியல் கட்சி தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் எந்த தலைவருக்கும் கிடைத்திடாத அன்பு விஜயகாந்திற்கு கிடைத்துள்ளது. 2 நாட்களில் 15 லட்சம் தொண்டர்கள், பொது மக்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

ராகுல் காந்தி தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு இரங்கல் தெரிவித்தார்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.




கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டரக அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. உடன் இணை இயக்குநர் (வேளாண்மை) மாரியப்பன், இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) சீனிவாசன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணவேணி உள்பட பலர் உள்ளனர்.




கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் 7வது தேசிய சித்த மருத்துவ திருநாள் நிகழ்ச்சியில் கே.எஸ்.சி. ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு மாவட்ட சித்த மருத்துவம் சார்பில் 100 திருக்குறள் கையட்டகப் பிரதிகளை வழங்கினார்.

# வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் தேசிய சமூகவியல் மாநாடு

வேலூர், டிச.30

வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் தேசிய அளவிலான சமூகவியல் மாநாடு தொடங்கியது. மாநாட்டுக்கு வி.ஐ.டி வேந்தர் ஜி.விசுவநாதன் தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக தகவல் தொழில்நுட்பம், டிஜிட்டல் சேவைத்துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் பங்கேற்றார். அவர் பேசியதாவது:

கடந்த 20 ஆண்டுகளாக மிகை உலகமயமாக்கலின் விளைவுகளாக அதிக துருவ முனைப்பு, அரசியலின் சீரழிவு போன்றவை பார்க்கப்படுகிறது. இந்த சீரழிவு, பிளவு சில அரசியல் கட்சிகளுக்கு தேர்தலில் வெற்றி பெற உதவியிருக்கலாம்.

உக்ரைன், காசா போன்ற ஆயுத மோதல்களால் தொலைந்து கொண்டிருக்கும் அப்பாவி உயிர்களைக் காப்பாற்றுவதில் ஐ.நா. போன்ற பெரியநிறுவனங்கள் சிதைவதற்கும் அரசியல்வாதிகளால் வழி வகுத்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில், புவி வெப்பமயமாதல், காலநிலை மாற்றம், அதிகரித்து வரும் சமத்துவமின்மை, துருவ முனைப்பு போன்ற சவால்களுக்கு சமத்துவமான சமுதாயத்தை உறுதி செய்வதற்கு சமூகவியலாளர்கள் தீர்வு காண வேண்டும்.

அதிக உலகமயமாக்கல் ஒரு நாட்டில் பல்வேறு பிரிவுகளுக்கு இடையே செல்வத்தின் தீவிர ஏற்றத் தாழ்வுக்கு வழிவகுத்துள்ளது. இத்தகைய ஏற்றத்தாழ்வை அரசின் நலத் திட்டங்கள், முன் முயற்சிகளால் மட்டுமே குறைக்க முடியும்.

இவ்வாறு அவர் பேசினார்.

வி.ஐ.டி வேந்தர் ஜி.விசுவநாதன் பேசியதாவது:

உலகளவில் இந்தியா 5வது பெரிய பொருளாதார நாடாக மாறியிருப்பது மகிழ்ச்சியளிப்பாக இருந்தாலும், தனி நபர் வருமானத்தில் 139வது இடத்தில் இருக்கிறது. நாம் விவசாய நிலங்களை இழந்து வருகிறோம். அதை தவிர்க்க வேண்டும்.

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான வழிமுறைகளை அரசு உருவாக்க வேண்டும். சமத்துவமின்மையால் இந்தியா மோசமான நாடாக உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.



இந்த மாநாட்டில் இந்தியா, அமெரிக்கா, வங்கதேசம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 900க்கும் அதிகமான சமூகவியலாளர்கள்கலந்து கொண்டனர்.

மாநாட்டில் இந்திய சமூகவியல் சங்கத் தலைவர் ஆபா சவுஹான், செயலர் மணீஷ் வர்மா, வி.ஐ.டி. துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், ஜி.வி. செல்வம், துணைவேந்தர் வி.எஸ்.காஞ்சனா பாஸ்கரன், இணை துணை வேந்தர் பார்த் தசாரதி மல்லிக், பதிவாளர் டி.ஜெயபாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வீட்டில் விளையாடியபோது பாத்திரத்திற்குள் சிக்கிய சிறுமி

ஜோலார்பேட்டை, டிச.30

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி அடுத்த தண்ணீர் பந்தலை சேர்ந்தவர் பூபதி, கூலித் தொழிலாளி. இவருக்கு திருமணமாகி புத்திப்பிரியா என்ற மனைவியும்,2வயதில்மிதுளாஸ்ரீ என்ற மகளும் உள்ளனர்.

நேற்று மிதுளாஸ்ரீ வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தாள். அருகில் சில்வர் தண்ணீர் பாத்திரம் இருந்தது. இந்த சில்வர் பாத்திரத்திற்குள் சிறுமி இறங்கினாள். அப்போது எதிர்பாராத விதமாக மிதுளாஸ்ரீ உள்ளே மாட்டிக் கொண்டார்.





பாத்திரத்தில் இருந்து வெளியே வர முடியாமல் கதறி அழுதது. அழுகுரல் சத்தம் கேட்டு ஓடிவந்த பெற்றோர், குழந்தை சில்வர் பாத்திரத்திற்குள் மாட்டியிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

அவர்கள் குழந்தையை வெளியே எடுக்க முயன்றனர். ஆனால் முடியவில்லை. இது குறித்து பெற்றோர் நாட்டறம்பள்ளி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

அதன் அடிப்படையில், நிலைய அலுவலர் (பொறுப்பு) ரமேஷ் தலைமையிலான வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்தனர். பாத்திரத்தில் மாட்டியிருந்த குழந்தையின் தலையை வெளியே எடுக்க முயன்றனர்.

பின்னர் கட்டிங் எந்திரத்தைகொண்டுபாத்திரத்தை இரண்டாக வெட்டி பிளந்து சிறுமியை பத்திரமாக மீட்டனர்.

வீட்டில் விளையாடி கொண்டிருந்த குழந்தை பாத்திரத்தில் மாட்டிக் கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# வெள்ள நிவாரண நிதி வினியோகம் தொடங்கியது

நெல்லை, டிச.30

தூத்துக்குடி, நெல்லை, தென்காசி மாவட்டங்களில் கடந்த 17,18ந் தேதிகளில் வரலாறு காணாத கனமழை பெய்தது.

இதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் இந்த மாவட்டங்களில் பெரும்பாலான பகுதிகள் பாதிக்கப்பட்டு பொது மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது.

இதைத்தொடர்ந்துபோர்க்கால அடிப்படையில் மீட்பு பணி, நிவாரண பணிகள் நடைபெற்றது.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெள்ள சேதங்கள் ஏற்பட்ட நெல்லை, தூத்துக்குடியை கடந்த 21ந் தேதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து அவர் வெள்ளம் பாதித்த பகுதி மக்களுக்கு வெள்ள நிவாரண தொகையை அறிவித்தார்.

அதன்படி நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் வெள்ள சேதங்களால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு தலா ரூ.6 ஆயிரமும், மற்ற பகுதி மக்களுக்கு ரூ. 1,000 நிவாரணம் அறிவித்தார். தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் தலா ரூ.1,000 நிவாரண தொகையாக அறிவித்தார்.

இதைத்தொடர்ந்து தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் அதிக அளவு வெள்ளத்தால் சேதம் அடைந்த பகுதிகள் கணக்கெடுக்கும் பணி நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து நிவாரண தொகை பெறுவதற்கான டோக்கன் விநியோகம் செய்யும் பணி அந்தந்த ரேஷன் கடைகள் மூலம் கடந்த 3 நாட்களுக்கு முன்பு தொடங்கியது.



அந்த டோக்கனில் நிவாரண தொகை வழங்கப்படும் நாள், நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து வெள்ளநிவாரணதொகை வழங்கும் பணி தூத்துக்குடி, நெல்லை, தென்காசி மாவட்டங்களில் இன்று தொடங்கியது. நெல்லை மாவட்டத்தில் நெல்லை, பாளையங்கோட்டை, சேரன்மகாதேவி, அம்பை ஆகிய தாலுகா பகுதிகளில் ரேஷன் அட்டைதாரர்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரணத்தொகை வழங்கப்படுகிறது.

ராதாபுரம் தாலுகாவில் லெவிஞ்சிபுரம், செட்டிகுளம், கூடன்குளம், விஜயாபதி மற்றும் திருவம்பலாபுரம் ஆகிய 5 வருவாய் கிராமங்கள், திசையன்விளை தாலுகாவில் திசையன்விளை, அப்பு விளை, உருமன்குளம், கரைசுத்து, புதூர், உவரி, குட்டம் ஆகிய 6 வருவாய் கிராமங்களை சேர்ந்த 3 லட்சத்து 40 ஆயிரத்து 552 ரேஷன் கார்டுதாரர்களுக்கு இன்று முதல் ரூ.6 ஆயிரம் வழங்கப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், ஏரல், சாத்தான்குளம் ஆகிய 5 தாலுகாக்கள் முழுவதும் 3 லட்சத்து 23 ஆயிரத்து 108 ரேஷன் கார்டு தாரர்களுக்கு ரூ.6 ஆயிரம் வழங்கப்படுகிறது.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தில்மொத்தம் 6 லட்சத்து 63 ஆயிரத்து 760 ரேஷன்கார்டுதாரர்களுக்கு வெள்ள நிவாரண தொகை ரூ.6 ஆயிரம் வழங்கப்படுகிறது.

இதற்காக ரூ.398 கோடியே 25 லட்சத்து 60 ஆயிரம் மாநில பேரிடர் நிதியில் இருந்து தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பித்து உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் மானூர், நாங்குநேரி தாலுகாக்கள் முழுவதும், ராதாபுரம், திசையன்விளை தாலுகாக்களில் ரூ.6 ஆயிரம் நிவாரணம் பெறும் 6 வருவாய் கிராமங்களை தவிர மற்ற பகுதிகள் என 1 லட்சத்து 63 ஆயிரத்து 705 ரேஷன் அட்டை தாரர்களுக்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில் பட்டி, விளாத்திகுளம், எட்டயபுரம், ஓட்டப்பிடாரம், கயத்தாறு என 5 தாலுகாக்கள் முழுவதும் 2 லட்சத்து 14 ஆயிரத்து 717 ரேஷன் அட்டைதாரர்களுக்கும் வெள்ள நிவாரண நிதியாக ரூ. 1,000 வழங்கப்படுகிறது.

தென்காசி மாவட்டத்தில் ஆலங்குளம், கடையநல்லூர், சங்கரன்கோவில், செங்கோட்டை, சிவகிரி, தென்காசி, திருவேங்கடம், வி.கே. புதூர் ஆகிய 8 தாலுகாக்கள் முழுவதும் 4 லட்சத்து 74 ஆயிரத்து 939 ரேஷன் கார்டு தாரர்களுக்கு ரூ.1000 வழங்கும் பணி இன்று தொடங்கியது.

இன்றுநிவாரணதொகை வழங்கும் பணி தொடங்கியதை அடுத்து நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் உள்ள ரேஷன்கடைகளில் இன்று அதிகாலை முதலே பொது மக்கள் நிவாரண தொகையை பெற திரண்டனர். அவர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து நிவாரண தொகையை பெற்று சென்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ள நிவாரண தொகையை வழங்கும் பணியை கனிமொழி எம்.பி. தொடங்கி வைத்தார். தொடர்ந்து அமைச்சர்கள் கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் எம்.எல்.ஏ.,க்கள் தங்கள் பகுதியில் வெள்ள நிவாரண தொகை வழங்கும் பணிகளை தொடங்கி வைத்தனர்.

ஸ்மார்ட் கார்டு, டோக்கன், ஆகியவற்றுடன் ரேஷன் அட்டையில் பெயர் உள்ள உறுப்பினர்களில் ஒருவர்கைரேகையை வைத்து தங்களுக்கான நிவாரண தொகையை பெற்று சென்றனர்.

வெள்ள நிவாரண தொகையை மேற்கொள்ளும் பணிகளுக்காக நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் அனைத்து ரேஷன்கடைகளும் வருகிற 31ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) செயல்படும் எனவும், 1ந் தேதி ( திங்கட்கிழமை) விடுமுறை நாளாகவும் அறிவிக்கப்படுகிறது.

# திருத்தணி முருகன் கோவிலில் 31ந்தேதி படித்திருவிழா

திருவள்ளூர்: டிச.30

திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில் முருகப் பெருமானின் பிரசித்தி பெற்ற ஐந்தாம் படை வீடாக உள்ளது. ஆண்டுக்கு 365 நாட்கள் வருவதை குறிக்கும் வகையில் மலைக்கோயிலுக்கு சென்று வர 365 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. திருத்தணி கோவிலில் ஆண்டுதோறும் டிச.31ந் தேதி திருப்படித்திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி வருகிற 31 ந்தேதி திருத்தணி கோவிலில் திருப்படிதிருவிழா நடைபெற உள்ளது. அன்று காலை10 மணிக்கு உற்சவர் முருகப்பெருமான் வெள்ளி மயில் வாகனத்தில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.





படித்திருவிழாவில் தமிழகம் உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து ஏராளமான பஜனை கோஷ்டியினர் காலை முதல் நள்ளிரவு 12 மணி வரை ஒவ்வொரு படிகள் தோறும் பக்தி பாடல் பாடியவாறு மலைக்கோவிலுக்கு சென்று வழிபடுவர். பக்தர்கள் அனைத்து படிகளுக்கும் மஞ்சள், குங்குமம் வைத்து, கற்பூரம் ஏற்றி தேங்காய் உடைத்து பூஜை செய்வார்கள்.

ஆங்கில புத்தாண்டையொட்டி 31 ந்தேதி நள்ளிரவு தரினம் மற்றும் புத்தாண்டு சிறப்பு தரிசனம் நடைபெறுகிறது. விழாவையொட்டி மலைக் கோவில், வாகனங்கள் செல்லும் மலைப்பாதையில் வண்ண விளக்குகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இதற்கானஏற்பாடுகளை கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ஸ்ரீதரன், இணை ஆணையர் ரமணி ஆகியோர் தலைமையில் அறங்காவலங்கள் சுரேஷ் பாபு, நாகன், மோகன், உஷா மற்றும் கோவில் ஊழியர்கள் செய்து உள்ளனர்.


திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 650 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். மலைக் கோவிலுக்கு செல்லும் மலைப்பாதையில் ஏற்பட்ட மண்சரிவு சரிசெய்யப்பட்டு உள்ளது. இப்போது கார் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மட்டும் செல்ல அனுமதிக்கப்படுகிறது.

படித்திருவிழாவின் போது மலைக்கோவிலுக்கு அனைத்து வாகனங்ககளையும் அனுமதிக்க அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

# அமோனியா வாயு கசிந்தபோது தொழிற்சாலை நிர்வாகத்தினர் மக்களை எச்சரிக்கை செய்யாதது ஏன்? சமூக ஆர்வலர்கள் கேள்வி

சென்னை, டிச.30

எண்ணூர் கடலில் எண்ணெய் கழிவு கலந்த விவகாரம் முடியாத நிலையில் உரத்தொழிற்சாலையில் இருந்து அமோனியாவாயு கசிந்தசம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அமோனியா வாயுவை சுவாசித்த எண்ணூரை சுற்றி உள்ள 10 மீனவ கிராமமக்கள் மூச்சு திணறல் உள்ளிட்ட பல்வேறு உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டனர். தொழிற்சாலையில் இருந்து அமோனியாவாயு கசிந்த உடன் நிர்வாகத்தினர் அபாய ஒலி எழுப்பி சுற்றி உள்ள கிராமக்ககளைஎச்சரிக்கை செய்யாதது ஏன்? என்று சமூக ஆர்வலர்கள்கேள்வி எழுப்பி உள்ளனர்.





மேலும் வாயு கசிந்தஉடன்அருகில் உள்ள பொது மக்களை வாகனங்கள் மூலம் வெளியேற்றி பாதுகாப்பான இடத்திற்கு அழைத்து சென்று இருக்கலாம் எனவும், நிலைமையின் வீரியத்தை தெரிவித்து இருக்கலாம் என்றும் பொதுமக்கள் குற்றம்சாட்டி உள்ளனர். அமோனியா வாயுவால் மயக்கம் அடைந்த பின்னரே இதுபற்றி வெளியே தெரியவந்தது. மக்களின் உயிரோடு தொழிற்சாலை நிறுவனங்கள் விளையாடக்கூடாது என்று பொது மக்கள் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.

# போராட்டம் நடத்தும் மக்கள் நிரந்தர தீர்வு காணாமல் மறந்து விடுகிறார்கள்

சென்னை, டிச.30

திருவொற்றியூர் சரஸ்வதி நகரைச் சேர்ந்த பாக்கியம் கூறியதாவது:

எண்ணூர் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறிய எண்ணெய் கழிவு மற்றும் அமோனியா வாயுவால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.





பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வு இல்லை போராட்டங்கள் நடத்தும் அவர்கள் அதற்கு நிரந்தர தீர்வு காணாமல் அடுத்தடுத்து மறந்து சென்று விடுகின்றனர். நாட்டின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது தான். குடியிருப்பு பகுதியில் தொழிற்சாலை இருப்பதையும் தடுக்க முடியாது. ஆனால் தொழிற்சாலைகள் மக்கள் உயிரை அலட்சியப் படுத்தி லாபத்தைத் தான் பார்க்கின்றனர். தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கரும்புகையால் சுற்றுச்சூழல் மாசுபடுவதுடன் திருவொற்றியூர், எண்ணூர் பகுதியில் ஏராளமானோருக்கு நுரையீரல் சம்பந்தப்பட்ட வியாதி மற்றும் தோல் வியாதி உள்ளது. மாசு கட்டுப்பாட்டு வாரியம் கூடுதல் கவனம் செலுத்தி தொழிற்சாலைகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# எண்ணெய் கழிவு: நிலத்தடி நீரை சோதனை செய்ய வேண்டும்

சென்னை, டிச.30

எண்ணெய் கழிவு கலந்த பாதிப்பில் இருந்து மக்களை பாதுகாக்க சில பரிசோதனைகளை மேற்கொள்வது முக்கியமானதாகும். எண்ணெய் படிந்த பகுதி மற்றும் எண்ணெய்யால் பாதிக்கப்பட்ட தாவரங்களை எடுத்து பரிசோதிக்க வேண்டும். மேலும் எண்ணெய் ஓடிய பகுதியில் மண் பரிசோதனை செய்து நச்சுத்தன்மையை கணக்கிட வேண்டும். நிலத்தின் உள்பகுதியில் நீண்ட தூரம் எண்ணெய் ஊடுருவி இருக்கலாம் என கருதினால் நிலத்தடி நீர் சோதனையும் மேற்கொள்ள வேண்டும். இது போன்ற பரிசோதனைகள் மேற்கொள்வதன் மூலம் எண்ணெய் கசிவின் தாக்கம் எந்த அளவுக்கு உள்ளது என்பதை அறிந்து அதற்கேற்ப தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து பாதுகாப்பாக இருக்க முடியும்.



இது தவிர பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் மற்றும் உதவிகளுக்கு சுற்றுச்சூழல் அதிகாரிகள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்மாவட்டங்களில் டி.என்.பி.எஸ்.சி. தேர்வை ஒத்தி வைக்க வேண்டும் அன்புமணி

சென்னை, டிச.30

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடுஅரசுமற்றும்பொதுத்துறைநிறுவனங்களில் காலியாக உள்ள 369 இடங்களை நிரப்புவதற்காக ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளுக்கான எழுத்துத் தேர்வுகள் வரும் ஜனவரி 6 மற்றும் 7ந்தேதிகளில் நடைபெறும்என்றுதமிழ்நாடுஅரசுப்பணியாளர்தேர்வாணையம் அறிவித்து இருக்கிறது.

ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலிருந்து மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்து உள்ளனர்.

தென்மாவட்டங்களில் அண்மையில் பெய்த மழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளத்தால் எத்தகைய பேரழிவுகள் ஏற்பட்டன என்பது அனைவரும் அறிந்தது தான். மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்மாவட்டங்களைச் சேர்ந்த தேர்வர்கள் போட்டித் தேர்வுக்கு தயாராக முடியாத நிலையில், தேர்வுகளை ஒத்திவைக்க வேண்டும் என்று டி.என்.பி.எஸ்.சிக்கு பல முறை வேண்டுகோள் விடுத்தும் அதை தேர்வாணையம் கண்டுகொள்ளவில்லை. அறிவிக்கப்பட்ட அட்டவணைப்படி எழுத்துத் தேர்வுகளை நடத்த ஆணையம் தயாராகி வருகிறது.

தென்மாவட்டங்களைச் சேர்ந்த தேர்வர்கள் இந்தத் தேர்வை சரியாக எழுதாவிட்டால், அடுத்த வாய்ப்புக்காக இன்னும் 2 ஆண்டுகள்காத்திருக்க வேண்டும். அதற்குள் பலர் வயது வரம்பை கடந்திருப்பார்கள் என்பதால் அவர்களுக்கு இன்னொரு வாய்ப்புக் கிடைக்காது.

இந்தக் காரணங்களையும், மழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளையும் கருத்தில் கொண்டு வரும் ஜனவரி 6 மற்றும் 7ந் தேதிகளில் நடைபெற இருக்கும் எழுத்துத் தேர்வு களை குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒத்தி வைக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு தமிழக அரசு ஆணையிட வேண்டும்.இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# ஆரோக்கியமாக இருந்திருந்தால் தமிழக அரசியலில் மிகப்பெரிய சக்தியாக திகழ்ந்திருப்பார் ரஜினி இரங்கல்

தூத்துக்குடி, டிச.30

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சேர்க்கபட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று காலமானார். அவரது உடல் தீவுத்திடலில் தொண்டர்கள், பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று மாலை 4.45 மணிக்கு அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட இருக்கிறது. சினிமா பிரபலங்கள் அவரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். நடிகர் ரஜினி காந்த் நாகர்கோவிலில் வேட்டையன் படப்பிடிப்பில் இருந்தார். விஜயகாந்த் காலமான செய்தி அறிந்து, படப்பிடிப்பை ரத்து செய்து சென்னை திரும்புகிறார். இந்த நிலையில் தூத்துக்குடி வந்தார். அப்போது அவர் கூறியதாவது: அன்பு நண்பர் விஜயகாந்த்ஐ இழந்தது மிகப்பெரிய துரதிருஷ்டம். அசாத்தியமான மனஉறுதி கொண்டவர். மீண்டும் உடல் ஆரோக்கியம் பெற்று திரும்பி வந்துவிடுவார் என்று நாம் அனைவரையும்நினைத்தோம். பொதுக்குழுவில்அவரை பார்க்கும்போது சற்று நம்பிக்கை குறைந்துவிட்டது. ஆரோக்கியமாக இருந்திருந்தால் தமிழக அரசியலில் மிகப்பெரிய சக்தியாக திகழ்ந்திருப்பார். அவரது ஆத்மா சாந்தியடையட்டும் என ரஜினி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ரஜினி தெரிவித்தார்.

# விருதுநகர்: விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல் செலுத்தும் விதமாக புஞ்சைபுளியம்பட்டியில் கடையடைப்பு



விருதுநகர, டிச.30

விருதுநகர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக விருதுநகர் நகர் பகுதியில் நேற்று மாலை தொடங்கிய சாரல் மழை இன்று காலை வரை விடிய, விடிய பெய்தது. இதனால் நகரின் முக்கிய சாலைகளில் மழை நீர் குளம் போல் தேங்கியது.

இன்று காலையில் தொடர் மழை காரணமாக விருதுநகர் மாவட்டத்தில் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டிருந்தது. மழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்தது.

மாவட்டத்தின் பிற பகுதிகளான சாத்தூர், சிவகாசி, இருக்கன்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், வத்திராயிருப்பு, பிளவக்கல் அணை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 2வது நாளாக மழை பெய்து வருகிறது. சில இடங்களில் கனமழை பெய்தது.

வெம்பக்கோட்டை சுற்று வட்டாரபகுதிகளில் பெய்த மழையால் வெம்பக்கோட்டை நீர்த்தேக்க அணை இன்று அதிகாலை முழு கொள்ளளவை எட்டியது. இதையடுத்து அணையில் இருந்து தண்ணீர் வட்டாட்சியர் பாண்டீஸ்வரி முன்னிலையில் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் இருக்கன்குடி நீர்த்தேக்கத்தை அடையும். இதன் காரணமாக ஆற்றின் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது.

ராஜபாளையம் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியை ஒட்டியுள்ள மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் பெய்து வரும் கனமழையால் அங்குள்ள பேயனாறு, அய்யனார் ஆறு மற்றும் காட்டாற்றுகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.

தொடர் மழையால் ராஜபாளையம் நகருக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கும் 6வது மைல் நீர்த்தேக்க ஏரியில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் 50க்கும் மேற்பட்ட குளங்கள், கண்மாய்கள் நிரம்பி மறுகால் பாய்கின்றன. வத்திராயிருப்பு பகுதியிலும் தொடர் மழையால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பிளவக்கல் அணையில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அணையில் இருந்து கணிசமாக நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அங்குள்ள மரிச்சு கட்டு பாலம் தண்ணீரில் மூழ்கியது. இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் உள்ள கூமாபட்டி, முதலியார்பட்டி, கொளூர்பட்டி, தெற்கு தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வீடுகளில் சூழ்ந்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதியடைந்தனர். பல இடங்களில் மரங்கள் வேரோடு முறிந்துவிழுந்தன. மின் தடை ஏற்பட்டது.

அருப்புக்கோட்டை, திருச்சுழி, காரியாபட்டி உள்ளிட்ட பகுதிகளிலும் தொடர்மழை பெய்து வருகின்றன. 2 நாட்களாக கொட்டித்தீர்த்து வரும் மழையால் மாவட்டத்தில் உள்ள 80 சதவீத நீர்நிலைகளில் தண்ணீர்வரத்து ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

திருச்சுழி, நரிக்குடி பகுதிகளில் பெய்த கனமழையால் கண்மாய்கள் நிரம்பி உபரி நீர் வெளியேறியது. இதன் காரணமாக பல இடங்களில் மழைநீர் வயல்களில் புகுந்து நெற் பயிர்கள் சேதமடைந்தன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

வத்திராயிருப்பு அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள சதுரகிரி சுந்தரசந்தன மகாலிங்கம் கோவிலுக்கு மார்கழி மாத பிறப்பை முன்னிட்டு நேற்று பக்தர்கள் மலையேற அனுமதிக்கப்பட்டனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நேற்று காலை 6 மணி முதல் பிற்பகல் 12 மணி வரைமலை ஏறினர். மாலையில் சதுரகிரி மலை பகுதியில் கருமேகங்கள் சூழ்ந்து மழை பெய்ய தொடங்கியது. இதனால் பக்தர்கள் அவசர அவசரமாக மலையில் இருந்து இறங்கினர். ஆனாலும் கனமழையால் மலைப் பாதையில் உள்ள மாங்கனி ஓடை, எலும்போடை, சங்கிலிபாறை, பிளாவடி கருப்பசாமி பகுதியில் உள்ள ஓடைகளில் திடீரென காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது.

இதையடுத்து வனத்துறை யினர், தீயணைப்பு வீரர்கள், போலீசார் விரைந்து செயல்பட்டு ஆங்காங்கே மலைப்பாதையில் சிக்கியிருந்த பக்தர்களை பத்திரமாக கீழே இறக்கினர்.

தொடர் மழையால் காட்டாறுகளில் வெள்ளம் அதிகரிக்கவே சதுரகிரி மலைக்கோவிலில் இருந்த 200 பக்தர்கள் கீழே இறங்க பக்தர்கள் அனுமதி மறுத்தனர். அவர்கள் கோவிலிலேயே தங்க வைக்கப்பட்டனர்.

இன்று காலை வரை மழை நிற்காததால் பக்தர்கள் கோவிலிலேயே தவிக்கும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் மலைப் பாதையில் உள்ள மாங்கனி ஓடை அருகே சிக்கியிருந்த பெண்கள் உள்பட 20க்கும் மேற்பட்டோரை நிலை அலுவலர் பால நாகராஜ், வனச்சரக அலுவலர் பிரபாகரன், வனவர் அபிஷேக்குமார் தலைமையிலான வீரர்கள் கயிறு கட்டி மீட்டு அடிவாரத்திற்கு பத்திரமாக கொண்டு வந்தனர். மழை நின்ற பின்பு சதுரகிரி மலையில் உள்ள பக்தர்கள் கீழே இறங்க அனுமதிக்கப்படுவார்கள் என வனத்துறையினர் தெரிவித்தனர்.

கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் பெய்த மழையின் அளவு மில்லி மீட்டரில் வருமாறு:

திருச்சுழி149.50, ராஜபாளையம்136, காரியாபட்டி81, ஸ்ரீவில்லிபுத்தூர் 153.90, விருதுநகர் 126.80, சாத்தூர்203, சிவகாசி171, பிளவக்கல்142, வத்திராயிருப்பு144.80, கோவிலாங்குளம்167.40, வெம்பக்கோட்டை 180, அருப்புக்கோட்டை124, மொத்த மழை அளவு 1779.40 மி.மீ. ஆகும்.

சிவகங்கை மாவட்டத்தில் சில இடங்களில் மட்டும் மழை பெய்தது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இன்று பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

மானாமதுரை, இளையாங்குடி பகுதிகளில் லேசான மழை பெய்தது. இன்று காலை வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

# வெள்ள நிவாரணம் ரூ.6 ஆயிரம் வழங்ககோரி பொதுமக்கள் போராட்டம்



திசையன்விளை, டிச.30

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பெய்த கனமழை, வெள்ள பாதிப்பு காரணமாக ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் அதிக அளவு பாதிப்படைந்த தாலுகாபகுதிகளைசேர்ந்த பொதுமக்களுக்கு ரூ.6 ஆயிரமும், மற்ற பகுதிகளுக்கு ரூ.1000 நிவாரண தொகையாகமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அதன்படி டோக்கன்கள் வழங்கப்பட்டு இன்று முதல் நிவாரண தொகை வழங்கப்பட்டு வருகிறது.

நெல்லை மாவட்டம் திசையன்விளை தாலுகாவில் சில பகுதிகளில் மட்டும் அதிகம் பாதிக்கப்பட்டதாக அறிவித்து ரூ.6 ஆயிரமும், சில கிராமங்களில் ரூ.1,000மும் நிவாரணம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் தாலுகாவிற்கு உட்பட்ட முதுமொத்தான்மொழி பஞ்சாயத்து மக்கள் இன்று அங்குள்ள ரேஷன் கடை முன்பு தங்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரண தொகை வழங்க வேண்டும் என கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேபோல் தாலுகாவுக்கு உட்பட்ட சுவிஷேசபுரம் பகுதியில் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட முயன்றனர். அவர்களை போலீசார் சமாதானப்படுத்தி அனுப்பினர். ஆனைக்குடியில் பொதுமக்கள் ரேஷன் கடை முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களுடன் திசையன்விளை போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள்.

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு தாலுகாவில் சில கிராமங்களில் பொது மக்களுக்கு ரேஷன் கார்டு அடிப்படையில் தலா ரூ.1000 நிவாரணம் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் கயத்தாறு தாலுகா ஆத்திகுளத்தை சேர்ந்த பொதுமக்கள் ஏராளமானோர் இன்று அங்குள்ள ரேஷன் கடை முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு கயத்தாறு போலீசார் விரைந்து சென்று அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது ஆத்திகுளம் பகுதி மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எங்களின் உடமைகளும் சேதம் அடைந்துள்ளது. எனவே அதிகம் பாதிப்பு ஏற்பட்ட பகுதியாக அறிவித்து எங்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரண உதவி வழங்க வேண்டும் என கூறினர்.

இதுகுறித்து அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், தாலுகா அலுவலகத்தில் முறையாக மனு வழங்கும் படியும் பொதுமக்களிடம் போலீசார் தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து அவர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

# கனமழை வெள்ளத்தால் 7 ஆயிரம் வீடுகள் சேதம்

தூத்துக்குடி, டிச.30

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17ந் தேதி பெய்த வரலாறு காணாத மழையால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது.

நெல்லை மாவட்டத்திலும் கனமழை பெய்ததால் அணைகளில் இருந்து சுமார் 1.5 லட்சம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் பல்வேறு குளங்களில் உடைப்பு ஏற்பட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் தனித் தீவுகளாகின. பல்வேறு சாலைகள் துண்டிக்கப்பட்டதால் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல முடியாமல் பொது மக்கள் அவதி அடைந்தனர். ஏராளமான குடியிருப்புகளை வெள்ள நீர் சூழ்ந்தது.

தற்போது மீட்பு பணிகள் பெரும்பாலும் முடிவடைந்து பொது மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி உள்ளனர். எனினும் சில இடங்களில் குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. அதனை அகற்றும் பணியும் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து மீட்பு பணியில் ஈடுபட்ட மீட்பு அதிகாரிகள் கூறியதாவது:

கனமழை காரணமாக நெல்லை மாவட்ட அணைகளில் இருந்து கடந்த 18,19 ந் தேதிகளில் தாமிரபரணியில் உள்ள ஸ்ரீவைகுண்டத்தின் கடைசி அணைக்கட்டிற்கு 1.65 லட்சம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் பல்வேறு இடங்களில் வெள்ளம் சூழ்ந்தது. மழை வெள்ளத்தால் 7,417 வீடுகள் சேதம் அடைந்துள்ளது. இதே போல் 2,785 மாடுகள் உள்ளிட்ட 1 லட்சத்து 7 ஆயிரம் கால்நடைகள் உயிரிழந்துள்ளது. இதே போல் 2 லட்சத்து 34 ஆயிரத்து 602 ஏக்கர் நிலங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவைகுண்டம், ஏரல் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் 20 நிவாரண மையங்களில் 6,500 பேர் தற்போதும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் இப்பகுதிகளில் வீடுகள் சேதம் அடைந்துள்ளதால் வேறு இடத்திற்கு குடிபெயர்ந்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

# பாராளுமன்ற தேர்தலில் பாரிவேந்தர் மீண்டும் போட்டியிட தீர்மானம்




சென்னை, டிச.30

இந்திய ஜனநாயக கட்சியின் பொதுக்குழு கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. கட்சியின் நிறுவனர் பாரிவேந்தர் எம்.பி. தலைமை தாங்கினார். கட்சி தலைவர் ரவி பச்சமுத்து, பொதுச்செயலாளர் பி.ஜெயசீலன், பொருளாளர் ஜி.ராஜன் முன்னிலை வகித்தனர். கட்சியின் மாநில, மண்டல, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், தற்போதைய அரசியல் சூழ்நிலைகள், தேர்தல் கூட்டணி நிலைப்பாடு போன்றவை தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மறைவுக்கு பொதுக்குழுவில் இரங்கல் தெரிவித்தனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மிச்சாங் புயல் ஏற்படுத்திய வரலாறு காணாத மழை வெள்ளத்தால் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் பொருள்சேதமும், உயிர்சேதமும் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் நீண்டகால தேவையை உணர்ந்து உடனடியாக மத்திய, மாநில அரசுகள் அவர்களுக்கு உதவிட வேண்டும். வடகிழக்கு பருவமழையின் மிக அதிதீவிர மழை பொழிவினால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு, பாரிவேந்தரும், ரவி பச்சமுத்துவும், தங்கள் சொந்த செலவில் பெருமளவு நிவாரண உதவிகள் வழங்கிய தற்காக பொதுக்குழு நன்றி தெரிவிக்கிறது. பாரிவேந்தர் எம்.பி. வருகிற பாராளுமன்ற தேர்தலில் மீண்டும் வேட்பாளராக களமிறங்க வேண்டும் என இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கின்றது.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தாழ்த்தப்பட்டநரிக்குறவ இன மக்கள் வீடு கட்ட 7 ஏக்கர் நிலத்தை தானமாக வழங்கிய விஜயகாந்த்



மதுரை, டிச.30

வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்? என்ற கவியரசு கண்ணதாசனின் பாடல் வரிகளுக்கு ஏற்ப வாழ்ந்தவர்களின் வரிசையில் புரட்சிக்கலைஞர் விஜயகாந்த்தும் இன்று மேலோங்கி நிற்கிறார்.

மதுரை மண்ணில் பிறந்தாலும், காலப்போக்கில் மறந்த வரலாறும் உண்டு. ஆனால்பிறந்தமண்ணுக்கு எதையாவது, இல்லை... இல்லை... ஏராளமாக செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்ந்தவர் விஜயகாந்த். அதற்கு சான்றாக பல இருக்க கோபுரத்தில் வைத்து பார்க்கக்கூடிய வகையிலும் அவரது ஈகை குணம் இருந்தது என்பதற்கு சான்றாக தனக்கு சொந்தமான நிலத்தை தானமாக வழங்கியுள்ளார் கேப்டன் விஜயகாந்த்.

திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெரிய ஆலங்குளம் கிராமத்தில் தனது தந்தை அழகர்சாமி, கிருஷ்ணன் என்பவரிடம் இருந்து வாங்கிய 7 ஏக்கர் நிலத்தை மகனின் எதிர்காலத்திற்காக வைத்திருந்தார். தந்தையின் மறைவுக்கு பிறகு திரைத்துறையில் உயர்ந்த இடத்தில் இருந்த விஜயகாந்த் தனக்கு தந்தை சேர்த்து வைத்திருந்த அந்த நிலத்தை ஏழைகளுக்கு தானமாக வழங்க முன் வந்தார்.

அதன்படி இயன்றதை வழங்குவோம், இல்லாதோருக்கு என்பதற்கேற்ப தாழ்த்தப்பட்டோர் மற்றும் நரிக்குறவ இன மக்களுக்கு மட்டும்தான் வழங்க வேண்டும் என்ற முடிவுக்கும் வந்த விஜயகாந்த் கடந்த 1998ம் ஆண்டு, தான் நேரடியாக வழங்காமல் அரசு மூலம் வழங்கினார். கலெக்டரிடம் ஒப்படைக்கப்பட்ட அந்த 7 ஏக்கர்நிலத்தின் இன்றைய சந்தை மதிப்பு ரூ.21 ஆகும்.

இதன் மூலம் பயனடைந்த அப்பகுதியை சேர்ந்த சோனைமுத்து, துரைப்பாண்டி ஆகியோர் கூறுகையில், கேப்டன் விஜயகாந்த் அரசியலுக்கு வருவதற்கு முன்னதாகவே தனக்கு சொந்தமான 7 ஏக்கர் நிலத்தை நாங்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக தானமாக அளித்தார். இன்று அவர் மறைந்தாலும், அவர் எங்களுக்கு இருப்பிடம் தந்து வாழ்வளித்த கடவுளாகவே காட்சி அளிக்கிறார் என்றனர்.

# விஜயகாந்துக்கு இரங்கல் தெரிவித்து சீர்காழி பகுதியில் கடை அடைப்பு



சீர்காழி:, டிச.30

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர வர்த்தக சங்கம் சார்பில் மறைந்த தேசிய முற்போக்கு திராவிட கழக தலைவர் விஜயகாந்த்க்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரைசீர்காழி பகுதிகளில் கடைகள் அடைத்து அனைத்து வணிகர்களும் இரங்கல் தெரிவித்தனர்.

இதேபோல் சீர்காழி நகர அனைத்து வணிகர்கள் நல சங்கம், சீர்காழி வர்த்தகர்கள் நல பாதுகாப்பு சங்கம் ஆகியன சார்பில் காலை 11 மணி வரைகடைகளை அடைத்து இரங்கல் தெரிவிக்கப்பட்டது. சீர்காழி அடுத்த மங்கை மடம் பகுதியில் பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை கடைகள் அடைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதைப்போல் குத்தாலம் பகுதியிலும் விஜயகாந்துக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் கடைகள் அடைக்கப்பட்டிருந்தது.

# சிறுத்தை தாக்கியதில் காயம் அடைந்த பெண் பலி



ஊட்டி, டிச.30

நீலகிரி மாவட்டம் பந்தலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சிறுத்தை ஒன்று நடமாடி வருகிறது.

இந்த சிறுத்தை அவ்வப்போது ஊருக்குள் புகுந்துமக்களைஅச்சுறுத்தி வருகிறது.

ஏலமண்ணா பகுதியில் கடந்த 21ந் தேதி காலை புகுந்த சிறுத்தை அந்த பகுதியை சேர்ந்த சரிதா(வயது 29), துர்கா(55), வள்ளியம்மாள் ஆகிய 3 பெண்களை சிறுத்தை தாக்கியது.

இதில் 3 பேரும் பலத்த காயம் அடைந்தனர். இதனை அறிந்த மக்கள் 3 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இந்த பகுதியில் சுற்றி திரியும் சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து பந்தலூர் சுற்றுவட்டார பகுதியில் சுற்றி திரியும் சிறுத்தையை பிடிக்க 5 இடங்களில் வனத்துறையினர் கூண்டு வைத்தனர். அத்துடன் அந்த பகுதிகளில் கண்காணிப்பு கேமராவும் பொருத்தி, சிறுத்தையை கண்காணித்து வந்தனர்.

காயம் அடைந்த 3 பேருக்கும் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இவர்களில் சரிதா என்ற இளம்பெண் மட்டும் சிகிச்சைக்காக கோவையில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

அங்கு அவரை டாக்டர்கள் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளித்து வந்தனர். இந்த நிலையில் நேற்றிரவு சிகிச்சை பலனின்றி சரிதா பரிதாபமாக உயிரிழந்து விட்டார்.

இந்த தகவல் அவர்களது உறவினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஏராளமானோர் அரசு ஆஸ்பத்திரியில குவிந்தனர். அவர்கள் சரிதாவின் உடலை பார்த்து கதறி அழுதனர். இது அங்கிருந்தவர்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# பிச்சாவரத்தை போல் கொசஸ்தலை ஆற்று அலையாத்தி மரங்களை பாதுகாக்க வேண்டும் சுற்றுச்சூழல் ஆர்வலர்

சென்னை, டிச.30

அலையாத்தி காடுகள் கடலின் கரையோரங்களில் உள்ள சதுப்புநிலங்களிலும், நதி முகத்துவார ங்களிலும், உவர் நீரிலும் வளரும் தாவரங்கள் ஆகும். இவை காடுகளை மட்டுமல்லாமல் மனிதர்கள் வாழும் நிலப்பரப்பையும் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. சுனாமி மற்றும் இயற்கை சீற்றத்தின் போது தண்ணீர் மற்றும் அலையின் வேகத்தை குறைப்பதில் இதன் பங்கு அளப்பரியது.

இதற்கு முன்பு மெரினாபெசன்ட் நகர் இடையே அடையாறு ஆற்று கரையோரத்தில் அலையாத்தி காடுகள் இருந்து உள்ளன. தற்போது இல்லை. கொசஸ்தலை ஆற்றின் முகத்துவார பகுதிகளில் அலையாத்தி தாவரங்கள் சுமார் 9 அடி வரை உள்ளன. எண்ணெய் கசிவால் இந்த அலையாத்தி மரங்களில் சுமார் 3 அடி உயரத்திற்கு எண்ணெய் படர்ந்து இருந்தது.

இது குறித்து சுற்றுச்சூழல் ஆர்வலர் ஒருவர் கூறும்போது, எண்ணெய் கசிவு காரணமாக கொசஸ்தலை ஆற்று முகத்துவாரத்தில் உள்ள அலையாத்தி காடுகளும் பாதிக்கப்பட்டு உள்ளன. சுமார் 3 அடி உயரத்திற்கு இந்த தாவரங்களில் எண்ணெய் படந்து உள்ளது. இந்த பாதிப்பில் இருந்து இந்த மரங்கள் எப்படி மீளும் என்று தெரியவில்லை. அங்குள்ள விலங்குகளும் மிகவும் முக்கியமானது. இங்குள்ள அலையாத்தி காடுகளை பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிச்சாரவத்தில் உள்ள அலையாத்தி காடுகளை போல் இங்குள்ள அலையாத்தி காடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்காதது ஏன்.?

இங்கு தனியார் துறைமுகம் வர உள்ளதா?அல்லது தொழிற்சாலைகள் தான் முக்கியமானதா? என்பதை அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும்.

பிச்சாவரத்தை போல் அலையாத்தி காடுகளை பாதுகாக்க அரசு ஊழியர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி பாதுகாத்தால் தான் அடுத்துவரும் பாதிப்பு களில் இருந்து தற்காத்து கொள்ளமுடியும். இதனை அரசு உடனடியாக செய்ய வேண்டும் என்றார்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
30.12.2023



# கேப்டன் இருந்த காலகட்டத்தில் சினிமா தலை சிறந்து விளங்கியது சாக்ஷி அகர்வால்

தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்று காலை காலமானார்.\ தீவுத்திடலில் வைக்கப்பட்ட விஜயகாந்தின் உடலுக்கு ஆயிரக்கணக்கான பொது மக்கள் நேரில் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

திரையுலகினர், அரசியல் பிரபலங்கள் என பலரும் நேரில்வந்துவிஜயகாந்தின்உடலுக்குஅஞ்சலிசெலுத்தினர்.

படப்பிடிப்பு உள்ளிட்ட காரணங்களால் வெளிநாடுகளுக்கு சென்றதிரைபிரபலங்கள்பலர்வீடியோ மூலம் இரங்கல் தெரிவித்தனர்.

இந்நிலையில், நடிகை சாக்ஷி அகர்வால் வீடியோ மூலம் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சாக்ஷி கூறியிருப்பதாவது:

கேப்டன் விஜயகாந்த் சார்.. அவருக்கு இந்த நிலை ஏற்படும் என சற்றும் எதிர்பார்க்கவில்லை. இன்னும் பல வருடங்கள் அவர் வாழ்ந்து எங்களையும் வாழ வைப்பார் என எதிர்பார்த்திருந்தோம். ஆனால் அவர் இறந்ததை எங்களால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

என்னைப் பொறுத்தவரை நான் ஓர் இளம் நாயகி.. என்னிடம் மூத்த கலைஞர்கள் சொல்லி நான் கேள்விப்பட்டதுண்டு. கேப்டன் இருந்த காலகட்டத்தில் சினிமா தலை சிறந்து விளங்கியது.

படப்பிடிப்புதளத்தில்லைட்மேன்கள்முதல்கதாநாயகன் வரை அனைவரையுமே சமமாக நடத்துவற்கு காரணமானவர் கேப்டன். இன்று அவர் உயிரோடு இல்லை என்றாலும், அவரது ஆசீர்வாதம் எங்களுக்கு பரிபூரணமாக கிடைக்கும் என நம்புகிறோம்.

கேப்டனை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கல் இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.

# விஜயகாந்த் மறைவிற்கு நடிகர் அஜித் இரங்கல்





நடிகரும் தே.மு.தி.க. நிறுவன தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான விஜயகாந்த் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று (டிசம்பர் 28) காலை உயிரிழந்தார். இவரது மறைவுக்கு திரை பிரபலங்கள், ரசிகர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் என பல தரப்பட்டோர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

முன்னணி நடிகர்களான, கமல், ரஜினி, விஜய், குஷ்பு, விஜய் ஆண்டனி என பலர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். விஜயகாந்தின் உடல் சென்னை, அண்ணா சாலை அருகே உள்ள தீவுத்திடலில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இவரது உடல் மதியம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தே.மு.தி.க. அலுவலகத்தில் தகனம் செய்யப்படவுள்ளது.

இந்நிலையில், விஜயகாந்த் மறைவிற்கு நடிகர் அஜித் இரங்கல் தெரிவித்துள்ளார். அதாவது, விஜயகாந்த் மனைவி பிரேமலதாமற்றும்சுதீஷிற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு இரங்கல் தெரிவித்துள்ளார். துபாயில் இருப்பதால் இறுதி அஞ்சலிக்கு வரமுடியவில்லை என அஜித் வருத்தம் தெரிவித்துள்ளார்.



# விஜயகாந்த் மறைவு: முத்தமிட்டு அஞ்சலி செலுத்திய விஜய் ஆண்டனி

நடிகரும் தே.மு.தி.க. நிறுவன தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான விஜயகாந்த் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று (டிசம்பர் 28) காலை உயிரிழந்தார். இவரது மறைவுக்கு திரை பிரபலங்கள், ரசிகர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் என பல தரப்பட்டோர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

முன்னணி நடிகர்களான, ரஜினி, விஜய், குஷ்பு என பலர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். விஜயகாந்தின் உடல் சென்னை, அண்ணா சாலை அருகே உள்ள தீவுத்திடலில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள. தொடர்ந்து இவரது உடல் மதியம் 1 மணிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தே.மு.தி.க. அலுவலகத்தில் தகனம் செய்யப்படவுள்ளது.

இந்நிலையில், விஜயகாந்த் உடலுக்கு நடிகர் விஜய் ஆண்டனி நேரில் அஞ்சலி செலுத்த வந்தார். அப்போது ரசிகர்களின் கட்டுக்கடங்காத கூட்டத்தில் சிக்கிக் கொண்ட விஜய் ஆண்டனி தடுப்புகளில் ஏறி குதித்து வந்தார். விஜய்காந்தின் உடலை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த விஜய் ஆண்டனி அவருக்கு முத்தமிட்டு அஞ்சலி செலுத்தினார். அனைவரும் மாலை அணிவித்து, தொட்டு கும்பிட்டு மரியாதை செலுத்திய நிலையில் விஜய் ஆண்டனி முத்தமிட்டது அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

# மன்சூர் அலிகான் செயலால் நெகிழ்ந்த மக்கள்




விஜயகாந்த் நடிப்பில் ஆர்.கே.செல்வமணி இயக்கத்தில் 1991ம் ஆண்டு வெளியான 'கேப்டன் பிரபாகன்' படத்தில் வில்லனாக மன்சூர் அலிகான் நடித்து இருந்தார். இப்படம் மன்சூர் அலிகானுக்கு திருப்பு முனையை ஏற்படுத்தியது. அதன்பிறகு பல படங்களில் மன்சூர் அலிகான் நடித்துள்ளார்.

இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன் கண்டனங்களுக்கும், சர்ச்சையிலும் மாட்டிய மன்சூர் அலிகானின் நேற்றைய செயல் அனைவரையும் நெகிழச் செய்துள்ளது.

நடிகரும், தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்த் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று காலை உயிரிழந்தார். அவரது மறைவு செய்தி அறிந்த மன்சூர் அலிகான் விஜயகாந்த் இல்லத்திற்கு சென்றார். அங்கு விஜயகாந்த் உடலுக்கு மன்சூர் அலிகான் அஞ்சலி செலுத்தினார். இதன்பின்னர், சாலிகிராமத்தில் இருந்து கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் விஜயகாந்த் உடல் கொண்டு செல்லப்பட்டது. சுமார் 3 மணிநேரத்திற்கும் மேலாக மக்களின் வெள்ளத்தில் ஊர்ந்து சென்ற வாகனத்துடன் நடந்து சென்றார்.

பின்னர் விஜயகாந்த் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இரவு கடந்தும் அவரது உடலை விட்டு கொஞ்சம் கூட நகராமல் இருக்கிறார் மன்சூர் அலிகான். இன்று காலை தீவுத்திடலுக்கு விஜயகாந்த் உடல் கொண்டு செல்லப்பட்ட போதும் கூடவே சென்றார். இன்று மாலை விஜயகாந்தின் உடல் நல்லடக்கம் செய்யும்வரை மன்சூர் அலிகான் இருப்பார். இதன் மூலம் தனது ஆசானுக்கு தன்னால் இயன்ற மரியாதையை அவர் செலுத்துகிறார் என்பதே நிதர்சனம்.

# மீண்டும் வெளியாகும் பார்க்கிங்



இயக்குனர் ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்கத்தில் ஹரிஷ் கல்யாண் நடிப்பில் உருவான திரைப்படம் 'பார்க்கிங்'.திரில்லர் ட்ராமாவான 'பார்க்கிங்' திரைப்படத்தை 'பலூன்' பட இயக்குனர் கே.எஸ்.சினிஷ், சோல்ஜர்ஸ்ஃபேக்டரிசார்பில்தயாரித்துள்ளார். மேலும் பேஷன்ஸ்டுடியோஸ் இணைந்துதயாரித்துள்ளது.

இப்படத்தின் கதாநாயகியாக இந்துஜா நடித்துள்ளார். அதுமட்டுமல்லாமல், எம்.எஸ்.பாஸ்கர், ராம ராஜேந்திரன், பிரார்த்தனா நாதன், இளவரசு உள்ளிட்ட பலர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்திற்கு சாம் சிஎஸ் இசையமைக்க, ஜிஜு சன்னி ஒளிப்பதிவு செய்துள்ளார். சிறிய பட்ஜெட்டில் உருவான இப்படம் டிசம்பர் 1ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. அதுமட்டுமல்லாமல் வசூலையும் குவித்தது. இதைத்தொடர்ந்து இப்படத்தின் ஓடிடி ரிலீஸிற்காக ரசிகர்கள் காத்திருந்தனர்.

இந்நிலையில், இப்படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'பார்க்கிங்'திரைப்படம்டிசம்பர்30ஆம்தேதிடிஸ்னிபிளஸ்ஹாட்ஸ்டார்ஓடிடிதளத்தில்வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டரை வெளியிட்டு அறிவித்துள்ளது.




# தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 2வது டெஸ்ட் இந்திய அணியில் இணைந்த ஆவேஷ் கான்

தென் ஆப்பிரிக்கா இந்தியா அணிகள் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இரு அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி 26ந் தேதி தொடங்கியது. இதில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 245 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அதை தொடர்ந்து ஆடிய தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்சில் 408 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

இதனையடுத்து 163 ரன்கள் பின் தங்கிய நிலையில் களமிறங்கிய இந்தியா 131 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் தென் ஆப்பிரிக்கா இன்னிங்ஸ் மற்றும் 32 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் ஆவேஷ் கான் இடம் பிடித்துள்ளார். தென் ஆப்பிரிக்கா சுற்றுப்பயணத்தில் சீனியர் வீரரான முகமது சமி இடம் பிடித்த நிலையில் அவருக்கு காயம் ஏற்பட்டதால் இந்த தொடரில் இருந்து விலகினார். இதனையடுத்து அவருக்கு பதிலாக ஆவேஷ் கான் இந்த தொடரில் இணைந்துள்ளார்.

இரு அணிகளுக்கு இடையேயான 2வது டெஸ்ட் போட்டி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 3ந் தேதி தொடங்குகிறது.

# 146 ஆண்டுகால கிரிக்கெட் வரலாற்றில் முதல்முறை: கோலி புதிய சாதனை




தென் ஆப்பிரிக்கா, இந்தியா மோதும் முதல் டெஸ்ட் போட்டி செஞ்சூரியன் நகரில் நடைபெற்றது. டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் களமிறங்கிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 245 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. தென் ஆப்பிரிக்கா சார்பில் ரபாடா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து, முதல் இன்னிங்சை தொடர்ந்த தென் ஆப்பிரிக்கா அணி, 408 ரன்களை குவித்து ஆல் அவுட் ஆனது. இதைத் தொடர்ந்து இந்திய அணி 163 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை தொடங்கியது.

முதலில் இருந்தே விக்கெட்டுகளை பறிகொடுத்த இந்தியா 131 ரன்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதன்மூலம் தென் ஆப்பிரிக்கா அணி இந்தியாவை இன்னிங்ஸ் மற்றும் 32 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இந்தியா சார்பில் சிறப்பாக ஆடிய விராட் கோலி 76 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார். தென் ஆப்பிரிக்கா சார்பில் சிறப்பாக பந்துவீசிய பர்கர் 4 விக்கெட்டுகளை கைப்பற்றிய நிலையில், யென்சென் 3 விக்கெட்டுகளையும், ரபாடா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

2வது இன்னிங்சில் 76 ரன்கள் குவித்ததன் மூலம் 146 ஆண்டு கால கிரிக்கெட் வரலாற்றில் விராட் கோலி புதிய சாதனையை படைத்துள்ளார். ஒரு காலண்டர் ஆண்டில் 7வது முறையாக 2000 ரன்களுக்கு மேல் ரன்கள் குவித்த ஒரே வீரர் என்ற பெருமையை விராட் கொலி பெற்றுள்ளார்.

இதற்கு முன்பு 2012 (2186 ரன்கள்), 2014 (2286 ரன்கள்), 2016 (2595 ரன்கள்), 2017 (2818 ரன்கள்), 2018 (2735 ரன்கள்) மற்றும் 2019 (2455 ரன்கள்) ஆகிய ஆண்டுகளில் இந்த சாதனையை அவர் செய்திருந்தார். 1877ல் முதன்முதலாக சர்வதேச கிரிக்கெட் விளையாடப்பட்டதிலிருந்து வேறு எந்த வீரரும் இந்த சாதனையை எட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தோல்வி அடைந்தது மட்டுமின்றி அபராதம் பெற்ற இந்திய அணி




இந்திய கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான டி20 தொடர் 11 என டிராவில் முடிந்தது. ஒருநாள் தொடரை 21 என்ற கணக்கில் இந்தியாகைப்பற்றியது. இதையடுத்து இருஅணிகளுக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் கடந்த 26ம் தேதி தொடங்கிய முதல் டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 32 ரன் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1 0 என முன்னிலையில் உள்ளது.

இந்த நிலையில், தென் ஆப்பிரிக்கா அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பந்துவீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதற்காக இந்திய அணிக்கு போட்டி கட்டணத்தில் 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தரவரிசைக்கான புள்ளிப்பட்டியலில் இரண்டு புள்ளிகளும் குறைக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவுக்கு எதிரான கடைசி போட்டியின் கேப்டன் எல்கருக்கு தெ.ஆப்பிரிக்கா





தென்ஆப்பிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனும், தொடக்க ஆட்டக்காரருமான டீன் எல்கர் 2012ம் ஆண்டு சர்வதேச போட்டியில் அறிமுகமானார்.

இதுவரை 84 டெஸ்ட் போட்டியில் விளையாடி 13 சதம், 23 அரைதம் உள்பட 5,146 ரன்கள் எடுத்துள்ளார். 19 டெஸ்ட் போட்டிகளுக்கு கேப்டனாகவும் இருந்து இருக்கிறார். 2018ம் ஆண்டுடன் ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கிய அவர் 8 ஒருநாள் போட்டியிலும் ஆடியுள்ளார்.

36 வயதான டீன் எல்கர் இந்த தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இதுகுறித்து டீன்எல்கர்கூறுகையில், 'கிரிக்கெட் ஆடுவது எப்போதும் எனது கனவாக இருந்து வந்தது. ஆனால் உங்கள் நாட்டு அணிக்காக விளையாடும்வாய்ப்பைபெறுவதுஆகச்சிறந்ததாகும். இந்தியாவுக்குஎதிரானடெஸ்ட்தொடருடன்அழகான விளையாட்டில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன். உலகில் எனக்கு மிகவும் பிடித்தமான மைதானமான கேப்டவுனில் எனது முதல் ரன்னை எடுத்தேன். அதே மைதானத்தில் எனது கடைசி ஆட்டத்திலும் ஆடுகிறேன்' என்றார்.

ஓய்வு அறிவிக்கப்பட்ட நிலையில் இந்தியாவுக்கு எதிரான2வதுடெஸ்ட்போட்டியில்எல்கர்கேப்டனாக செயல்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரின் ஓய்வுக்கு மரியாதை கொடுக்கும் பட்சத்தில் தென் ஆப்பிரிக்கா கிரிக்கெட் வாரியம் இதனை தெரிவித்துள்ளது.

பவுமா காயம் காரணமாக 2வது டெஸ்ட் போட்டியில் இருந்து விலகி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்**

**விளக்கம்:**
செய்வதற்குஅருமையானசெயல்களை செய்யவல்லவரேபெரியோர்.செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.